//தேர்வுகள்// //அவசரசம்// //தனி கவனம்//

# வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 4728 /ஆ4 /2022 12.12.2022

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் -வேலூர் மாவட்டம் –2022-2023- ஆம் கல்வியாண்டு – பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வுகள் –பள்ளி மாணவர் பெயர் பட்டியல்-EMIS விவரங்கள் அடிப்படையில் தயாரித்தல் மற்றும் மாணவர்கள் விவரம் பதிவேற்றம் செய்தல் –கூடுதல் கால அவகாசம் வழங்குதல் –சார்பாக

பார்வை : 1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.020846 நாள் 09.11.2022,
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.020846 நாள் :30.11.2022
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.020846 நாள் :12.12.2022

===========

பார்வை 1-ல் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டம் –2022-2023- ஆம் கல்வியாண்டில் , பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கான பெயர் பாட்டியல் தயாரிப்பதற்கு 14.11.2022 முதல் 30.11.2022 வரையிலான நாட்களில் EMIS தளத்தில் தங்கள் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு விவரம் பதிவேட்ட்ரம் செய்ய தெரிவிக்கப்பட்டது பின்னர் பார்வை 2 –ல் காணும் செயல்முறைகளின் படி கூடுதல் கால அவகாசம் 01.12.2022 முதல் 12.12.2022 வரையிலான நாட்களில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது

மேலும் ஒரு சில பள்ளிகளில் மேற்குறிப்பிட்ட பணியினை மேற்கொள்வதற்கு கூடுதல் அவகாசம் கோரியதால் EMIS தளத்தில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் விவரங்களை சரிபார்த்து திருத்தங்கள் செய்யும் பணியினை மேற்கொள்ள 19.12.2022 வரை கூடுதல் அவகாசம் பார்வை 3-ல் காணும் செயல்முறைகளின் படி தெரிவிக்கப்பட்டுள்ளது .

மேற்குறிப்பிட்ட பணியினை EMIS தளத்தில் மேற்கொள்ள இதுவே கடைசி வாய்ப்பாகும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே மேற்காணும் பணியினை 16. 12.2022 க்குள் நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை உயர் /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

மேலும் தங்கள் பள்ளிக்குரிய மாணவர்கள் பெயர்பட்டியல் முழுமையாக முடிக்கப்பட்டமைக்கு கீழ்காணும் சான்றினை பூர்த்தி செய்து 16.12.2022 க்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் சமர்பிக்குமாறு அனைத்து வகை உயர்/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மீள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் பணியினை உரிய தேதிக்குள் முடிக்கப்படாமல் இருப்பின் சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியரே முழுப் பொறுப்பாகும் .எனவே தனிகவனம் செலுத்தி தேர்வுக்குரிய அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்யுமாறு மீள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: சான்று

ஓம்.க.முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

அனைத்து உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,வே.மா

நகல்

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/ தனியார் )அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

# சான்று

| | | |
|---|---|---|
| பள்ளியின் பெயர் | : | |
| பள்ளி எண் (VLRE0000)Ex: | : | |
| பள்ளியின் தேர்வுமைய எண்:(Ex-102001) | : | |
| பத்தாம் வகுப்பு மொத்த மாணவர் எண்ணிக்கை | : | |
| பதினோராம் வகுப்பு மொத்த மாணவர் எண்ணிக்கை | : | |

எங்கள் பள்ளியில் உள்ள பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவ/மாணவிகளின் 2022-2023-ஆம் கல்வியாண்டிற்கான பெயர் பட்டியல் சார்பான எவ்வித திருத்தங்கள் இன்றி முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

தலைமைஆசிரியர் /முதல்வர்
முத்திரையுடன் கையொப்பம்